

சென்னை கிழக்கு மாவட்ட சார்பில் அம்பத்தூர் வடக்கு பகுதியில் கலைஞர் நூற்றாண்டு விழா முன்னிட்டு தலைமைச் செயற்குழு உறுப்பினரும் மண்டல குழு தலைவருமான பி.கே.மூர்த்தி தலைமையில் மாபெரும் கவியரங்கம் நடைபெற்றது நிகழ்ச்சியை இந்து சமய அறநிலை துறை அமைச்சர் பி.கே. சேகர் பாபு துவங்கி வைத்தார். கவியரங்கிற்கு கவிஞர் அப்துல் காதர் தலைமை ஏற்றார். மேலும் கவிஞர்கள் கபிலன், விவேகா, அம்பிகா குமரன் தனிக்கொடி மற்றும் தமிழ்வாணன் கலைஞர் அவர்களைப் பற்றி கவிபாடினர் நிகழ்ச்சியில் அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல் பகுதி செயலாளர்கள் எம். டி. ஆர். நாகராஜ் டி.எஸ்.பி. ராஜகோபால் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர் வட்ட செயலாளர் வே ராதாகிருஷ்ணன் கூறினர்.



முதலமைச்சர் – கழகத்தலைவர் அவர்களின் ஆணைப்படி வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கழக மூத்த முன்னோடிகளை நேரில் சந்திக்கும் நிகழ்வில் கழக மூத்த முன்னோடி முன்னாள் எம்.எல்.ஏ. மற்றும் முன்னாள் மாவட்டச் செயலாளர் ஆர்.சின்னசாமியை நேரில் சந்தித்து பொன்னாடை அணிவித்து மரியாதை செலுத்தி கலந்துரையாடினார். உடன் தருமபுரி கிழக்கு மாவட்டச் செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி, தருமபுரி மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன், நகரச் செயலாளர் நாட்டான் மாது மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.

### உடலுறுப்பு தானம் செய்வதில்

# இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம்!

## ‘அனைவரும் உடலுறுப்பு தானம் செய்வோம்’ என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

சென்னை, ஆக. 14 -

உடலுறுப்பு தானம் செய்வதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம் பெற்றுள்ளது என்றும் அனைவரும் உடலுறுப்பு தானம் செய்வோம் என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத் தளப் பதிவு வருமாறு:-

உடலுறுப்பு தானம் என்பது தமிழ்நாட்டில் ஓர் இயக்கமாவே செயல்பட்டு வருகிறது. இந்தியாவிலேயே மிகப்பரந்த மனதுடைய மக்களும், மிகச்சிறந்த மருத்துவக் கட்டமைப்பும் இங்கு இருப்பதால் தான் உறுப்புகளை தானம் செய்வதில் இந்தியாவிலேயே முதலிடம் பெற்றுள்ளோம்.

தீயும் மண்ணும் தின்னும் உடலைப் பிறர்க்களித்து அவர்களுக்கு வாழ்வளிக்க முன்வருவோம்! அனைவரும் உடலுறுப்பு தானம் செய்வோம்!

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### “நீட்” தேர்வு குறித்த ஆளுநரின் கருத்தை கடுமையாக எதிர்க்கிறேன்!

### தங்களது வேதனை, குமுறலை பெற்றோர்கள் ஆளுநர் மாளிகையில் வெளிப்படுத்தியதில் இருந்தாவது

# தமிழ்நாடு ஆளுநர் ‘நீட்’ தேர்வு குறித்து தெளிவு பெற வேண்டும்!

### தென்காசியில் - மருத்துவம் , மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டி!

**தென்காசி, ஆக.14-**

**நீட் தேர்வு விலக்கு குறித்து ஆளுநரின் கருத்தினைக் கண்டித்து தென்காசியில் பேட்டியளித்த மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்த்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், “ஆளுநர் மாளிகையில் மாணவர்கள் வெளிப்படுத்திய வேதனை, குமுறல் கண்டாவது தமிழ்நாடு ஆளுநர், ‘நீட்’ தேர்வு குறித்து தெளிவு பெற வேண்டும்” என்றும் ‘நீட்’ தேர்வு குறித்த ஆளுநரின் கருத்துக்கு எனது கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன் என்றும் குறிப்பிட்டார்.**

அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்த தாவது

தேர்தல் அறிக்கையில் பிரதிபலித்தது மட்டும் அல்லாமல் ஆட்சியில் வந்தவுடன் நீதியரசர் ராஜன் தலைமையில் குழு அமைத்து அதிலிருந்து தீர்ப்பை பெற்று அதை சட்டமன்றத்தில் மசோதாவாக வைத்து அனைத்து கட்சிகளின் ஒப்புதலை பெற்று ஆளுநர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இதே ஆளுநர் அவர்கள் இந்த மசோதாவிற்கு ஒப்புதல் அளித்து மேதகு குடியரசுத் தலைவர் அவர்களுக்கு அனுப்பி வைத்திருக்க வேண்டும். ஆனால் அவர் அதனை செய்யாமல் காலம் கடத்தினார். மீண்டும் ஒரு மசோதாவினை சட்டமன்றத்தில் நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. ஆளுநர் அவர்கள் வேறு வழியே இல்லாமல் இந்த மசோதாவினை குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்தார்.

தற்போது மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் உள்துறைக்கு அனுப்பி வைத்தார். உள்துறை அமைச்சகம் தமிழ்நாட்டில் 3 துறைகளுக்கு அதாவது ஆயுஷ் துறை, கல்வித் துறை, சுகாதாரத் துறை ஆகிய துறைகளுக்கு தொடர்ந்து இரண்டு, மூன்று முறை Clarification என்கின்ற வகையில் எழுதி அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை சட்ட வல்லுநர்களுடன் தொடர்ந்து பேசி அவர்கள் ஒவ்வொரு முறையும் கேட்கும் Clarification களுக்கு சரியான பதிலை சட்ட ரீதியாக எழுதி அனுப்பிக் கொண்டிருக்கிறோம். கடந்த மாதம் கூட Clarification வந்தது. பதில் அனுப்பி இருக்கிறோம். நீட் தேர்விலிருந்து விலக்கு பெற வேண்டும் என்பது கூட இப்போது வரை உயிரோட்டமாக இருந்து கொண்டிருக்கிறது.

இந்த நிலையில் நேற்று ஆளுநர் அவர்கள் ஆளுநர் மாளிகையில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவர், மாணவியரோடு கலந்து பேசுகின்ற நிகழ்வில் நீட் தேர்வு விலக்கிற்கு நான் கையெழுத்து போட மாட்டேன் என்று சொல்கிறார். முதலில் கவர்னர் அவர்கள் இதிலிருந்து ஒரு விளக்கம் பெற வேண்டும். இனிமேல் நீட் தேர்வு விலக்கிற்கும், கவர்னருக்கும் சம்மந்தம் இல்லை. கவர்னருக்கான ஒரே பணி என்பது சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மசோதாவை குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைப்பது மட்டும்தான்.



அவர் அனுப்பி வைக்க மறுத்தால் இரண்டாவது முறை மசோதா நிறைவேற்றி அனுப்பப்பட்டது. வேறு வழி இல்லாமல் கவர்னர் அவர்கள் குடியரசுத் தலைவர் அவர்களுக்கு அனுப்பி வைத்து விட்டார். இதோடு அவர் பணி முடிந்து விட்டது, நீட்டிற்கும், கவர்னருக்கும் தொடர்பில்லை, அவருடைய ஒப்புதல் என்பது இனி அவசியமும் இல்லை,

இந்த நிலையில் நான் நீட் தேர்வு விலக்கிற்கு கையெடுத்து போட மாட்டேன் என்று சொல்வது இன்னும் மக்களை ஏமாற்றுவதற்கு ஒன்று, இனி நீட் தேர்விற்கான விலக்கு என்பது குடியரசுத் தலைவர் அவர்களால் Clarification திருப்தி படுத்தப்பட்டு உள்துறை அமைச்சகம் குடியரசுத் தலைவர் அவர் களுக்கு பரிந்துரை செய்யப்பட்டு குடியரசுத் தலைவர் ஒப்புதல் வழங்கினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட தகவலினை ஆளுநருக்கு தகவல் மட்டுமே தெரிவிப்பார்கள். அனுமதிக்காக அனுப்ப மாட்டார்கள்.

கவர்னருக்கு குடியரசுத் தலைவர் நீட் தேர்வு விலக்கு ஒப்புதல் தந்தால் இந்த ஒப்புதல் கடிதம் கவர்னருக்கு தகவலாக மட்டுமே அனுப்பப்படுமே தவிர அவர்களிடத்தில் ஒப்புதலுக்கு அனுப்பபடாது, எனவே இனிமேல் எந்த வகையிலும் கவர்னருக்கும் நீட் தேர்வு விலக்கிற்கும் தொடர்பில்லை. இந்த நிலையில் மீண்டும் குழம்பிய குட்டையில் மீன் பிடிப்பதைப் போல கவர்னர் அவர்களின் இந்த கருத்து என்பது அபத்தமான ஒன்று, இன்னொன்று ஒரு கவர்னருடைய செயல் எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும், ஒட்டுமொத்த தமிழர்களின் எண்ணம் நீட் விலக்கு என்பது. கவர்னர் என்பவர் ஆட்சியின் பிரதிபலிப்புகளை ஓர் ஆட்சியின் நல்லதுகளை, இந்த ஆட்சி மக்களுக்கு செய்கின்ற திட்டங்களை அவர் அதனோடு இணைந்து பயனிப்பது தான் ஆளுநர் அவர்களுக்கு கடமையாக இருக்கும், அதற்கு நேர் மாறாக மக்களுக்கு எதிரான மக்களுடைய கொள்கைக்கு எதிரான நேற்று அவர் பேசிக் கொண்டு இருக்கும் போது அம்மாசியப்பன், இராமசாமி என்கின்றவர்கள் சேலம் உருக்காலையில் பணி செய்து கொண்டிருக்கின்றனர்.

அவருடைய குழந்தை 623 மதிப்பெண்கள் பெற்றிருந்த நிலையில் தரவரிசையில் 808-வது இடத்தை பெற்றிருக்கிறார்கள். அந்தக் குழ நந்தைக்கு செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இடம் கிடைத்து இருக்கிறது, அந்தக் குழந்தையின் தந்தை ஆளுநர் பேசிக் கொண்டிருக்கும் போது சொல்லுகிறார்.

நான் என்னுடைய குழந்தை நன்றாக படித்துக் கொண்டிருந்தது, தரவரிசை பட்டியலில் இந்திய அளவில் 808 வது இடம் பிடித்து இருக்கிறது, நல்ல கல்லூரியில் எனது குழந்தைக்கு இடம் கிடைத்திருக்கிறது, நல்ல கல்லூரியில் சேர்த்து இருக்கிறேன், ஆனாலும் நீட் தேர்விற்கு எதிராக பேசுகிறேன், நான் விரக்தியில் பேசவில்லை, நீட் தேர்வில் வெற்றி பெற்றதற்கு பிறகு பேசுகிறேன், நீட் தேர்வில் என்னுடைய குழந்தை வெற்றி பெற்றது, நீட் தேர்வினால் தமிழகத்தில் 15 குழந்தைகள் இறந்து போயிருக்கின்றனர், என்னுடைய குழந்தையும் கூட இந்த நீட் தேர்வில் வெற்றி பெறுவதற்கு, கடுமையாக உழைத்தது, 20 மணி நேரம், 18 மணி நேரம் படித்தது, அதற்கான நான் ரூ. 20 இலட்சம் வரை டியூசன் என்கின்ற வகையில் செலவு செய்திருக்கிறேன்.

இதனால் இது போன்று செலவு செய்து, எனது குழந்தையும் கஷ்டப்பட்டு படித்த பிறகுதான் நீட் தேர்வில் வெற்றி பெற்றார், இது போன்று பொருளாதாரம் எல்லாப் பெற்றோர்களுக்கும் இருக்கும் என்பது கடினம், எனவே இந்த கவர்னரின் கூற்றை நான் எதிர்க்கிறேன், மறுக்கிறேன் என்று யாரை அழைத்து பாராட்டு விழா நடத்தினாரோ அந்தக் குழந்தையின் பெற்றோரே சொல்லியிருக்கிறார்கள், இதிலிருந்தாவது கவர்னர் தெளிவு பெற வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.


தமிழ்நாடு அரசு

**விழுப்புரம் நெடுஞ்சாலை, (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம்.**

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

**ஒ.அ.எண். 29 / 2023 - 24 / தவஅ / நாள்: 11.08.2023**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப்பொறியாளர் (நெ), க(ம)ப, விழுப்புரம் வட்டம் அவர்களால், திட்டம் சாராப் பணிகள் 2023-24 -ன் கீழ் விழுப்புரம் (நெ), க(ம)ப, கோட்டத்தில் **(VPM 112)** ஒரு பணிக்கு இணையவழியில் ஒரு உறை முறையில் சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **08.09.2023, 15.00** மணி வரை வரவேற்கப்படுகிறது.

பணியின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதரவிபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **21.08.2023** முதல் தெரிந்துகொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது..

**செ.ம.தொ.இ / 4462 / ஒப்பந்தப்புள்ளி / 2023**

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

**கண்காணிப்புப் பொறியாளர் (நெ),**
**க&ப வட்டம், விழுப்புரம்**


# தி.மு.க. மருத்துவ அணி மாநில நிர்வாகிகள் அவசர ஆலோசனைக் கூட்டம்

**மருத்துவ அணிச் செயலாளர் மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. அறிவிப்பு**

கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கழக மருத்துவ அணியின் மாநில நிர்வாகிகள் அவசர ஆலோசனைக் கூட்டம் **15.08.2023** செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணி அளவில் காணொளி காட்சி வழியாக நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கழக மருத்துவ அணியின் மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

பொருள் : 1. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாட்டம்
2. மாவட்டம் மற்றும் தொகுதி அளவிலான நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்
3. அணியின் வளர்ச்சிப் பணிகள்

அண்ணா அறிவாலயம்
சென்னை - 18
நாள் 14.08.2023

மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ.
செயலாளர்
தி.மு.க. மருத்துவ அணி

### அருணாசலேஸ்வரர் திருக்கோயில் அய்யங்குளத்தில் ‘தூய்மை அருணை’ சார்பில்

# தூர்வாரும் பணிகள் அக்டோபருக்குள் நிறைவுறும்!

### அமைச்சர் எ.வ.வேலு நேரில் ஆய்வு செய்து பேட்டி!!

*திருவண்ணாமலை, ஆக.14-*

திருவண்ணாமலை அருள் மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயில் அய்யங்குளத்தில் தூய்மை அருணை சார்பில் நடைபெற்று வரும் தூர்வாரும் பணிகள் “அக்டோபர் மாதத்திற்குள் நிறைவுற்று பொதுமக்கள் மற்றும் ஆன்மீக பக்தர்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும்” என்று பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் ஆய்வு செய்த பின் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.

திருவண்ணாமலை அருள் மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயில் அய்யங்குளத்தில் தூய்மை அருணை சார்பாக நடைபெற்று வரும் தூர்வாருதல் மற்றும் தூய்மைப்படுத்தும் பணியினை பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமு கங்கள் துறை அமைச்சர் எ.வ. வேலு நேற்று (13.08.2023) நேரில் ஆய்வு மேற்கொண்டு பேசியதாவது:

திருவண்ணாமலை நகரம் ஆன்மீகம் நிறைந்த நகரம் எனவே 2017ஆம் ஆண்டு முதல் தூய்மை அருணை என்ற அமைப்பு உருவாக்கப்பட்டு திருவண்ணாமலை நகரினை தூய்மையாக வைத்திருக்க வேண்டும் என்ற நோக்கத்தில், 40 பகுதியாக பிரித்து, 4 பேர் கொண்ட மேற்பார்வையாளர்கள் தலைமையில் 40 அமைப்பாளர்கள், வார்டுக்கு 25 பேர் வீதம் 1000 தூய்மைக் காவலர்கள் கொண்டு ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும், நகர் முழுவதும் சுகாதாரப் பணிகள், கழிவுநீர் அகற்றும் பணி, மரக்கன்றுகள் நட்டுதல், நகர பகுதிகளில் உள்ள பக்க கால்வாய்களை சுத்தப்படுத்துதல், போன்ற எண்ணற்ற தூய்மைப் பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

அதேபோல் இக்குளத்தில் தூர் வாரும் பணி, சரிந்துள்ள படிகட்டுகளை நிலை நிறுத்தும் பணி, படிகட்டுகளுக்கு கைப்பிடி அமைத்தல் போன்ற பணிகளை தூய்மை அருணை சார்பில் பணிகள் மேற்கொள்ளலாம் என தீர்மானித்து தற்போது போர்கால அடிப்படையில் பணிகள் நடைபெற்று வருகின்றது. அதுமட்;டுமில்லாமல், மருத்துவர், நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோர் தலைமையில் தூய்மை பணிகள் மூலம் வாரத்தில் ஏழு நாட்களும் தேர்ரோடும்; வீதியை சுற்றி தூய்மை பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும் தூய்மை அருணை தன்னார்வ அமைப்பு செயல்படுகளை கண்டறிந்து சினம் என்ற தன்னார்வ அமைப்பு தூய்மை அருணையுடன் இணைந்து கொண்டது. அதே போல் மற்ற தன்னார்வ அமைப்புகளும் விருப்பம் இருந்தால் இணைந்து பணியாற்றலாம். இந்த தூய்மை பணி சிறப்பாக நடைபெற காரணமாக இருந்த தன்னார்வ அமைப்பை சார்ந்த ஒருவரை தான் தற்போது இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் அறங்காவலராக நியமிக்கப்பட்டுள்ளது. இதில் எவ்வித பாகுபடுயின்றி அனைவரின் நன்மதிப்பை பெற்றுள்ளவரை தான் நியமிக்கப்பட்டுள்ளது.

**தூய்மை அருணை சார்பில் உதவிகள்!**

அதுமட்டுமில்லாமல் தூய்மை அருணை பணியாளர்கள் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் தூய்மை பணியினை மேற்கொண்டதற்காக தூய்மை அருணை அமைப்பினை பாராட்டி மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை சார்பில் பாராட்டுச்சான்றிதழ் வழங்கப்பட்டது. மேலும் கொரோனா காலத்தில் முக கவசம், நீலவேம்பு கசாயம், தொழிலாளர்களுக்கு கையுறை, அத்தியாவசிய பொருட்கள் வழங்கப்பட்டு, மாதமாதம் கிரிவலப்பாதையில் உள்ள சாதுக்களுக்கு 500 உணவு பொட்டலங்கள் தினந்தோறும் வழங்கப்பட்டு கொரோனா காலம் முடியும் வரை தூய்மை அருணை சார்பில் உதவிகள் செய்யப் பட்டன.

**மகான் ரமணமகரிஷி குளத்தில் நீராடினார்!**

1896ல் அய்யங்குளம் குளக் கரையில் “மகான் ரமணமகரிஷி” அவர்கள் முதன்முதலில் திருவண்ணாமலைக்கு வந்த போது அய்யங்குளத்தில் நீராடினார் என ஆன்மீக மக்களால் கருதப்படுகிறது இந்த குளம் கார்த்திகை மாதத் தீபத் திரு விழா நிறைவு பெற்ற பின்; அண்ணாமலையார் தெப்ப உற்சவம் ஆகியவை இக்குளத்தில் நடைபெறும்.

முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுப்பதற்கு இக்குளக் கரைக்கு வருகிறார்கள். இந்தக் குளமானது 3 ஏக்கர் பரப்பளவில், 360 அடி நீளமும் 360 அடி அகலமும், 32 அடி ஆழமும் மற்றும் அலங்கார படிகட்டுகளுடன் கூடிய 32 படிகள் உள்ளது. இக்குளத்தின் மையப்பகுதியில் ஒரு மண்டபம் உள்ளது.

இக்குளம் சிவனை குறிக்கும் தளமாக உள்ளதால் நத்தி சிலையை அமைக்க வேண்டும் என ஆன்மீக பக்தர்கள் கோரிக்கை வைத்தனர் அவர்களின் கோரிக்கை நிறைவேற்றும் வகையில் குளத்தின் மைய பகுதியில் நந்திசிலை அமைக்கப்படும். மேலும் இக்குளம் காலத்தால் மிகப் பழமையானது. நாயக்க மன்னர்களால் கட்டப் பட்டது.



இந்த குளமானது. நீண்ட காலமாக போதிய பராமரிப்பு இல்லாததால், குளத்தின் ஆழம் 32 அடியில் இருந்து 16 அடியாக சேரும் சகதியுமாக தூர்ந்துள்ளது. சில ஆண்டுகளுக்கு முன்பு இந்த குளத்தில் தீர்த்த வாரி நடந்தபோது நெரிசலில், குளத்தில் மூழ்கி சேற்றில் சிக்கி 4 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். இக்குளத்தினை சீரமைக்க பொதுமக்கள் மற்றும் ஆன்மீக பக்தர்கள் எனது கவனத்திற்கு கொண்டு வந்தனர், 2021 தேர்தலின் போது, அய்யங்குளம் குளத்தினை சீரமைப்பேன் என்ற ஒரு வாக்குறுதியும் நான் அளித்திருந்தேன், 25.6.2023 அன்று நான் நேரில் சென்று குளத்தினை ஆய்வு செய்தேன்.

இந்த ஆய்வின் போது தூய்மை அருணை இயக்கத்தினரும் கலந்து கொண்டனர். அதன் அடிப்படையில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் அலுவலகத்திற்கு அய்யங்குளம் தூர்வார வேண்மென கடிதம் அனுப்பட்டு உடனடியாக தீர்வுகாணும் விதமாக இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் தூர்வாரும் பணிக்கான ஆணையினை வழங்கினார். தற்போது “தூய்மை அருணை” சார்பில் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகிறது. மேலும் இப்பணிகள் அனைத்தும் அக்டோபர் மாத இறுதிக்குள் முடித்து, பொது மக்கள் மற்றும் ஆன்மீக பக்தர்களின் பயன்பாட்டிற்கு விரைவாக கொண்டு வரப்படும்.

இவ்வாறு பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் கூறினார்.


மேலும் திருவண்ணாமலையில் தூய்மை அருணை, சார்பில் துணை நிற்போம் தொண்டு செய்வோம் என்று அனைவரின் சார்பில் பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் உறுதி மொழி ஏற்றுக்கொள்ளப் பட்டது.

இந்த ஆய்வின் போது தமிழ்நாடு சட்டப்பேரவை துணை தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் பா.முருகேஷ், திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, மாநில தடகள சங்க துணை தலைவர் மரு. எ.வ.வே.கம்பன், நெடுஞ்சாலை துறை தலைமை பொறியாளர் சந்திரசேகரன், கண்காணிப்பொறியாளர் பழனிவேல், கோட்டப்பொறியாளர் ராஜ்குமார், அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயில் அறங்காவலர் குழுத்தலைவர் ஜீவானந்தம், அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயில் இணை ஆணையர் திருமதி.ஜோதி, தமிழ்நாடு அரசு உடல் உழைப்பு தொழிலாளர் மற்றும் சமூக பாதுகாப்பாளர் வாரியம் இரா.ஸ்ரீதரன், திருவண்ணாமலை நகராட்சி ஆணையர் தட்சணாமூர்த்தி, உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள், தூய்மை அருணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# ஏ.கே.ஜெகதீசன்

### ஆகஸ்ட் 14 (2020)



**கழகம் தொடங்கப்பட்ட முதலே உறுப்பினராகிய மூத்த கழக முன்னோடியான இவர், வகுப்புவாரி உரிமை ரத்து செய்யப்பட்டபோது, சமூக நீதியின் போர்க்குரலாக சக மாணவர்களைத் திரட்டிப் போராடியவர்.**

**சேப்பாக்கம் பகுதிச் செயலாளர் – தலைமைச் செயற்குழு உறுப்பினர் என கழகத்தில் பல்வேறு பொறுப்பு வகித்தவர்.**

**பேரறிஞர் அண்ணா தலைமையில், தலைவர் கலைஞர் முன்னிலையில் கலைஞரின் “நச்சுக்கோப்பை” நாடகத்தை நடத்தி அதில் நடித்தவர். மிசா காலத்தில் கலைஞர் அவர்களுக்கு அவருக்கு உறுதுணையாக இருந்தார் என்பதற்காகவே போலீசாரால் கடுமையாகத் தாக்கப்பட்டதோடு, பொய் வழக்கில் கலைஞர் அவர்களுடன் கைது செய்யப்பட்டவர்.**

**1996ல் சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராகவும் – 2001ல் மாநகராட்சியின் எதிர்க்கட்சித் துணைத் தலைவராக செயல்பட்டவர்.**

**2019ல் கழக முப்பெரும் விழாவில், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால், முத்தமிழறிஞர் கலைஞரின் “நெஞ்சுக்கு நீதி”யில் பாராட்டப்பட்டுள்ள இவருக்கு “கலைஞர் விருது” வழங்கி சிறப்பித்தார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**